

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்: அருள் தந். ரோபட் டேனியல்**

**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து : புலம் பெயர்ந்த நமது சகோதர சகோதரிகள் மற்றும் ஆள்கடத்தலுக்கு உள்ளானோரின் அழுகுரல் கேட்கப்பட்டு, அக்கறை செலுத்தப்பட மன்றாடுவோம்.**

**பிப்ரவரி மாத கரு : அவர்தம் காயங்களால், நீங்கள் குணமடைந்துள்ளீர்கள்.**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| பிப் 16 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்கால 6ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ) | பொதுக்கால 6ஆம் ஞாயிறு- புகுமுக தேர்வுக்கு அனுப்புதல் |
| | காலை 11.00 | திருப்பலி (ம) | பொதுக்கால 6ஆம் ஞாயிறு |
| | மாலை 6.00 | திருப்பலி (த) | அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம், ஜெலாப்பாங் |
| பிப் 17 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| பிப் 18 செவ் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| பிப் 20 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| பிப் 21 வெள் | மாலை 5.30/6.30 | தே.ந.ஆராதனை/திருப்பலி(த) | பொதுக்கால வாரநாள் |
| பிப் 22 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | திருத்தூதர் பேதுருவின் தலைமைப்பீடம் |
| | மாலை 4.30 | திருமணம் (த) | கேவின் நிக்லஸ் சூசைமாணிக்கம் & ரெபேக்கா அற்புதசாமி |
| பிப் 23 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்கால 7ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்கால 7ஆம் ஞாயிறு |
| | மாலை 5.30 | நவநாள்/ திருப்பலி (த) | கிறிஸ்து அரசர் சிற்றாலயம், புந்தோங் தீகா |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| பிப் 16 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | காலை 10.30 | பங்கு மண்டபம் | மறைக்கல்வி மாணவர்கள்- பெற்றோர்களுக்கான அமர்வு (படிவம் 3 & 4) |
| | காலை 10.30 | பங்கு வளாகம் | மறைக்கல்வி மாணவர்களின் வேடிக்கை விளையாட்டுகள் (வகுப்பு 1 & 2) |
| | பிற்பகல் 4.00 | பெர். மை 1-2 | தனித்த தாய்மார்கள் குழு கூட்டம் |
| பிப் 17 திங் | மாலை 7.45 | பெர். மை 1-2 & 2-2 | RCIA (த) & RCIA (ஆ) |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | குடும்ப வாழ்வு பணிக்குழு |
| | மாலை 8.00 | பெர். மை 1-1 | சீடத்துவம் (த) |
| பிப் 18 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை செபம் |
| | மாலை 8.00 | பெர். மை 1-2 | புனித கிரகோரி பாடல்குழு |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | புலூமா மகளிர் குழு கூட்டம் |
| பிப் 19 புதன் | மாலை 8.00 | பெர். மை 1-1 | அருங்கொடை (த) |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | பெற்றோர் ஆதரவு குழு கூட்டம் |
| | மாலை 8.00 | பெர். மை 2-1 | மருத்துவ குழு |
| பிப் 20 வியா | மாலை 7.45 | பெர். மை 2-2 | RCIA (ஆ) |
| | மாலை 8.00 | பெர். மை 1-1 | எழுப்புதல் செபம் |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | சிறார்களுக்கான இறைவார்த்தை குழு கூட்டம் |
| | மாலை 8.00 | பெர். மை 2-3 | பங்கு திருவழிப்பாட்டு குழு கூட்டம் |
| | மாலை 8.00 | பெர். மை 2-4 | உபசரிப்பு குழு கூட்டம் |
| பிப் 21 வெள் | மாலை 7.30 | பெர். மை 1-2 | பங்கு நிதிக்குழு கூட்டம் |
| | மாலை 8.00 | பெர். மை 2-3 | பாரம்பரிய காட்சியக கூட்டம் |
| | மாலை 8.00 | ஜெலாப்பாங் | அருங்கொடை (த) |
| பிப் 22 சனி | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாயமாதா நவநாள் |
| பிப் 23 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.15 | பெர். மை 1-1 | மறைக்கல்வி உருவாக்கத்தினர் கூட்டம் |

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. மறைக்கல்வி கட்டணம்:** பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் மறைக்கல்வி கட்டணத்தை 1 மார்ச் 2020க்குள் செலுத்திவிடுமாறு நினைவுறுத்தப்படுகிறீர்கள். பங்களிப்பிற்கான கோரிக்கை கடிதம் உங்கள் பிள்ளைகளின் மூலமாய் 5 ஜன 2020ல் கொடுக்கப்பட்டது. வசூலிக்கப்பட்ட பங்களிப்பு வருடத்தின் மறைக்கல்வி திட்டங்களுக்கும், நிகழ்வுகளுக்கும் பயன்படுத்தப்படும். உங்களின் தாராளமான ஆதரவு மிகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**2. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (ஆங்கிலம்):** நாள்: 14 மார்ச் 2020 (சனி), நேரம்: மாலை 4.30. மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**3. சிலுவையில் 7 வார்த்தைகள் செப வழிபாடு (தமிழ்):** இந்த தவக்காலம் முழுவதும் இயேசு சிலுவையில் கூறிய கடைசி 7 வார்த்தைகளை நாம் செபித்து தியானிக்கவுள்ளோம். ஒவ்வொரு வியாழக்கிழமைகளில் 7 வாரம் நடைபெறும். முதல் நாள்: 27/2/2020 இரவு 8.00க்கு பெர். மை 1-1ல்நடைபெறும். இந்த அருள் காலத்தில் கடவுளின் மன்னிப்பைப் பெற்று பிறருக்கும் அதை வழங்குவோம். அனைவரும் இதில் கலந்து கொள்ளலாம். உங்கள் பெயர்களை பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும்.

**4. மருத்துவ சந்திப்பு நேரம்:** பல்வேறு மருத்துவ பிரிவுகளைச் சேர்ந்த சுகாதார பராமரிப்பு பணியாளர்களுடன் நேருக்கு நேர் ஆலோசனை வழங்க பங்கு மருத்துவ பணிக்குழு ஒரு மாதாந்திர திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. இம்மாத அமர்வு 23 பிப் 2020 (ஞாயிறு) காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு ஓர் உணவியல் நிபுணரால் வழி நடத்தப்படும். இவர் குறிப்பிட்ட மருத்துவ பிரச்சினைகளை உடையவர்களுக்கும், உடல் எடை மிக அதிகமானோருக்கும், உடல் எடை மிக குறைந்தோருக்கும், சிறுவர்களுக்கும், வயது முதிர்ந்தோருக்கும், உணவியல் ஆலோசனை வழங்குவார். உணவியல் பழக்கங்கள் பற்றிய கேள்விகள் உடையோர் பங்கு மண்டபத்தில் அமைந்துள்ள மருத்துவ அறையில் எங்களை சந்திக்க மிகவும் வரவேற்கப்படுகின்றனர்.

**5. புனித பெரிகிரீன் - கவனிப்பு & செபம்:** புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் உங்களை பார்வையிட தயவுசெய்து உங்கள் பெயர்களை பங்கு அலுவலகத்தில் பதிவுசெய்யலாம். உங்களுக்காக நாங்கள் எங்களின் கவனிப்பையும், செபத்தையும் ஒப்புக்கொடுப்போம்

**6. நோவல் கோவிட் 19 நச்சுயிரி பற்றிய உடனடி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பங்கின் ஆலோசனைகள் (ஊஃகான் நச்சுயிரி):** அ) காய்ச்சல் அல்லது உடல் நலமற்றிருக்கும் நபர்கள் (குழந்தைகள் உள்பட) திருப்பலிக்கு வருவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர். அவர்கள் வீட்டிலேயே இருக்கவும், மற்ற பொது இடங்களைத் தவிர்க்கவும் ஆலோசனை வழங்கப்படுகிறது. ஆ) இந்த கால கட்டத்தில் நற்கருணையை உங்கள் கைகளால் பெறுங்கள். இ) அமைதியை/ சமாதானத்தை அறிவித்துக்கொள்ளும்போது கைகளைக் குலுக்குவதை/ உடலை தொடுவதை தவிர்த்துக்கொள்ளுங்கள். ஈ) ஆலய நுழைவாயில்களிலுள்ள கிண்ணங்களில் புனித நீர் இருக்காது. உ) மெல்லிழைத்தாள்களை (Tissue) இருக்கைகளில் விட்டுச்செல்லாதீர்கள், அவற்றை தயார் செய்யப்பட்டிருக்கும் குப்பைத் தொட்டிகளில் போடுங்கள். ஊ) தேவைப்பட்டால் தயவு செய்து முகக் கவசங்களை அணியுங்கள்.

**7. காலை சிற்றுண்டி:** குடும்ப வாழ்வு பணிக்குழு 16 பிப் 2020 ஞாயிறு காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு காலை சிற்றுண்டியை விற்பனை செய்யவுள்ளனர்.

**8. அனைத்துலக மகளிர் தின கொண்டாட்டம்:** 8 மார்ச் 2020 (ஞாயிறு) மாலை 5.00 ~ 7.00 @ பெர். மையத்தில் நடைபெறும். 26 ஜன ~ 23 பிப் 2020 ஞாயிறு திருப்பலிகளுக்கு பிறகு பங்கு மண்டபத்தில் பதிவுகள் நடைபெறும்.

**9. திருநீற்று புதனுக்கு 2019இல் ஆசீர்வதிக்கப்பட்ட குருத்தோலைகள்:** விபூதி புதனுக்கு பயன்படுத்தப்படும் விபூதி முந்தைய ஆண்டு ஆசீர்வதிக்கப்பட்ட ஓலைகளிலிருந்து வருகிறது. இவ்வாண்டு விபூதி புதன் **26/2/2020ல்** வருகிறது. பழைய ஓலைகளை 23 பிப் 2020 (ஞாயிறு) நண்பகலுக்கு முன்பாக தூயக பணியாளர் மெத்தியூஸ் அல்லது பங்கு அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

**புலூமா ஏழைகளுக்கான உணவு (2009ல் நிறுவப்பட்டது):** உணவு திட்டம்: புதன்/ வியா மதியம் 12.45 ~ 1.45 வரை First Garden மெதுவோட்ட பாதை (Jogging Track) பெகோர் அடுக்குமாடி வீடு அருகில் செயல்படுகிறது.

**நம்பிக்கை மையம்:** நம்பிக்கை மையம் ஞாயிறு காலை 10.30 ~ மதியம் 12.00 மற்றும் செவ்வாய் & வியா காலை 10.30 ~ மதியம் 12.00/ மாலை 5.30 ~ மாலை 7.00 வரை திறந்திருக்கும்.

**நிதி பொறுப்புடைமை:** பங்கு குருவானவரிடமிருந்து எழுத்துபூர்வமான அனுமதி இல்லாமல் ஏதேனும் நிதி உதவி பெற யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. தயவுசெய்து என் பெயரை பயன்படுத்தி யாரேனும் பணம் கேட்டால் அவர்களை பொறுட்படுத்தாதீர்கள். இம்மாதிரியான எந்த வித நிதி மோசடிக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன். இம்மாதிரியான பிரச்சனைகள் இருந்தால் உடனடியாக என்னையோ அல்லது பங்கு அலுவலகத்தையோ தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். அனைத்து நன்கொடைகளும் பங்கு அதிகாரப்பூர்வமான ரசீதுகளால் ஏற்றுக்கொள்ளப்படும்.

<u>2020 பிப்ரவரி மாத திருமணம்</u>

பிப் 29 மாலை 4.30 சடங்கு (ஆ) ஏரன் மாட் த/பெ சகாயநாதன் & சிசிலின் ஜேன் த/பெ M. லோரன்ஸ்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம்/ திருத்தொண்டரிடம் தெரிவியுங்கள்

**சிற்றாலயம் மற்றும் பங்கு நிதி ஜனவரி 2020 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம் - ரிம 485,611.28

அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம் - ரிம 559,977.72 ஆலய பழுதுபார்ப்பு & சீரமைப்பு - ரிம 488,732.05

(மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**09/02/20 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - <u>RM 475.20</u> **காலை 9.00** - <u>RM 990.70</u> **மொத்தம்**- <u>RM 1,465.90</u>

**2019** - <u>RM 22.00</u> **2020** - <u>RM 790.00</u> **ஆலய பழுதுபார்ப்பு & சீரமைப்பு**- <u>RM 1,115.50</u>

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்